


# SRI SARADA COLLEGE OF EDUCATION (AUTONOMOUS), SALEM-16

**REACCREDITED BY NAAC WITH “A” GRADE (III Cycle)**

## EXTERNAL AUDIT SCHEDULE / COMMUNICATION

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 18:47

## தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

**ஆணையிடுபவர்: முனைவர் திரு க. எழிலன், எம்.காம்., எம்.ஃபில்., பி.எச்.டி.,**

ந.க.எண்: 154/ஆ1/2022

தேதி: 07.02.2022

**பொருள்:** தணிக்கை – தருமபுரி மண்டலத்திற்கு உட்பட்ட அரசு உதவிபெறும் கல்லூரிகள் - தணிக்கை மேற்கொள்ளுதல் - உத்தரவிடுதல் - தொடர்பாக.

---

**ஆணை:**

தருமபுரி மண்டலத்தை சார்ந்த அரசு உதவிபெறும் கல்லூரிகளில் தணிக்கை மேற்கொள்ள வேண்டிய கல்லூரிகளில் அட்டவணையின்படி, அக்கல்லூரி பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலக தணிக்கை குழுவினரால் தணிக்கைப் பணி மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | கல்லூரியின் பெயர் | தணிக்கை மேற்கொள்ளப்படும் ஆண்டு | தணிக்கை மேற்கொள்ளும் நாட்கள் |
|---|---|---|---|
| 1. | சேலம் சௌடேஸ்வரி கல்லூரி, சேலம். | 2013 - 2014 முதல் 2016 - 2017 வரை (4 வருடம்) | 28.02.2022 முதல் 05.03.2022 வரை |
| 2. | கந்தசாமிக் கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர், நாமக்கல். | 2018 - 2019 முதல் 2020 - 2021 வரை (3 வருடம்) | 07.03.2022 முதல் 12.03.2022 வரை |
| 3. | ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி(த), சேலம். | 2016 - 2017 முதல் 2020 - 2021 வரை (5 வருடம்) | 04.04.2022 முதல் 09.04.2022 வரை |
| 4. | ஜே.கே.கே. நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரப்பாளையம். | 2016 - 2017 முதல் 2020 - 2021 வரை (5 வருடம்) | 18.04.2022 முதல் 23.04.2022 வரை |
| 5. | ஸ்ரீ சாரதா உடற்கல்வியியல் கல்லூரி, சேலம். | 2017 - 2018 முதல் 2020 - 2021 வரை (4 வருடம்) | 02.05.2022 முதல் 07.05.2022 வரை |
| 6. | ஸ்ரீ சாரதா மகளிர் கல்வியியல் கல்லூரி(த), சேலம். | 2017 - 2018 முதல் 2020 - 2021 வரை (4 வருடம்) | 09.05.2022 முதல் 14.05.2022 வரை |
| 7. | சேலம் சௌடேஸ்வரி கல்லூரி, சேலம். | 2017 - 2018 முதல் 2020 - 2021 வரை (4 வருடம்) | 30.05.2022 முதல் 04.06.2022 வரை |

தணிக்கை பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு தொடர்புடைய அனைத்து பதிவேடுகள், ஆவணங்களை உடனுக்குடன் அளித்து தணிக்கை பணியினை முடித்திட ஒத்துழைக்குமாறு சம்மந்தப்பட்ட கல்லூரி முதல்வர் / செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இக்கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கான பெறல் ஏற்பினை உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
தருமபுரி மண்டலம், தருமபுரி.

SRI SARADA COLLEGE OF EDUCATION ★ SALEM-636 016 ★
282
7 FEB 2022

பெறுநர்:
சம்மந்தப்பட்ட கல்லூரி முதல்வர் / செயலாளர்கள்.

SRI SARADA COLLEGE OF EDU... 011 17 APR 2023 ★ SALEM-636016. ★

# கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்

**முனைவர்.(திருமதி).நா.இராமலட்சுமி,**
எம்.எஸ்ஸி,. எம்.பில்,. பி.எச்.டி,.
**கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,**
**கல்லூரிக் கல்வி இணை இயக்ககம்,**
**தருமபுரி மண்டலம்,**
**தருமபுரி – 636 705.**

பெறுநர்

**செயலர்**
ஸ்ரீ சாரதா மகளிர் கல்வியியல் கல்லூரி
(தன்னாட்சி),
சேலம் - 16.

**ந.க.எண்:154/ஆ1/2022** **நாள் : .04.2023.**

அய்யா/அம்மையீர்,

பொருள் : தணிக்கை - தனியார் உதவிபெறும் கல்லூரிகள் மீதான துறைத் தணிக்கை – 2017-2018 முதல் 2020-2021 முடிய ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

1976 - ஆம் வருடத்திய தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டப்பிரிவு 34 உட்பிரிவு 2(அ)ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தங்கள் கல்லூரியில் 2016-2017 முதல் 2020-2021 ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கை அறிக்கை தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளின் நகலுடன் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இதன் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுகாற்று விதிகள் விதி 34(2 - பி)ன் படியும் தணிக்கை அறிக்கைக்கான பத்திகளை கீழ்க்குறித்த படிவத்தில் தணிக்கை அறிக்கை கிடைத்த 30 தினங்களுக்குள் கல்லூரிக்குழு ஆட்சி மன்றக் குழுவின் தீர்மான நகலுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ.எண் | தணிக்கைத் தடையின் சுருக்கம் | தணிக்கை தடை மீதான பதில்கள் | இணை இயக்குநர் அலுவலகக் குறிப்பு மற்றும் ஆணை |
|---|---|---|---|
| | | | |

இத்தணிக்கை அறிக்கை பெற்றுக்கொண்டமைக்கான ஏற்பினை அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நா. இராமலட்சுமி 12/4/2023
**கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,**
**தருமபுரி மண்டலம், தருமபுரி.**
12/4/23

**இணைப்பு : தணிக்கை பத்திகள் - பக்க எண் 1 முதல் 6 வரை**
**முதல்வருடன் தணிக்கை அறிக்கை கலந்தாலோசித்து முடிவு செய்யப்பட்டது.**

நா. இராமலட்சுமி 12/4/2023
**கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்**

I/C ...சுசித்ரா 12/04/2023
**முதல்வர்**
முதல்வர்
ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி
(தன்னாட்சி),
சேலம்-636 016

பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை - 600 006.

**தணிக்கை அறிக்கை நகல் பெற்றுக்கொண்டேன்**

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023

I/C ...சுசித்ரா 12/04/2023
முதல்வர்
ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி
(தன்னாட்சி),
சேலம்-636 016

ச.சா 17/04/23

# அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளுக்கான தணிக்கை அறிக்கை

மாவட்டம் : சேலம் மாவட்டம்

கல்லூரி : ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி (தன்னாட்சி), சேலம்-16.

இடம் : சேலம்.

## 2017- 2018 ஆம் ஆண்டு முதல் 2020-2021 வரையிலான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை

## பகுதி ஐ (அ)

| | | | |
|---|---|---|---|
| 1. | தணிக்கை மேற்கொண்டவர்கள் பெயரும் பதவியும் | : | 1. திரு.இரா.அருள் கண்காணிப்பாளர்<br>2. திரு.தீ.ராஜேஷ் உதவியாளர்<br>3. திருமதி.சி.ரேவதி உதவியாளர் |
| 2. | தணிக்கைக்கு எடுத்துக் கொண்ட நாட்கள் | : | 09.05.2022 முதல் 14.05.2022 வரை |
| 3. | தணிக்கை காலத்தில் பதவியிலிருந்த கல்லூரிச் செயலரின் பெயர் | : | யதீஸ்வரி.விநாயகப்ரியா |
| 4. | தணிக்கை காலத்தில் பதவியிலிருந்த கல்லூரி முதல்வரின் பெயர் | : | முனைவர்.ச.சாந்தி<br>எம்.ஏ,. எம்.எட்., எம்.ஃபில்,. பி.எச்.டி,.<br>(01.04.2018 முதல் நாளது வரை) |
| 5. | தணிக்கை மேலாய்வு செய்த அலுவலர் பெயர் | : | கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்<br>கல்லூரிக் கல்வி இணை இயக்ககம்<br>தருமபுரி மண்டலம்,<br>தருமபுரி – 636 705. |
| 6. | மேலாய்வு செய்த நாட்கள் | : | |

## பகுதி ஐ (ஆ)

**7. தணிக்கை மேற்கொள்வதற்கான ஆதாரம் குறித்த முகவுரை:**

அ) 1976 ஆம் வருடத்தின் தமிழ்நாடு தனியார் கல்லூரிகளின் ஒழுங்காற்றுச் சட்டப் பரிவு 34 இன் கீழ் வெளியிட்டுள்ள உட்பிரிவு (1) இன் படியும் 1976 ஆம் வருடத்திய தமிழ்நாடு தனியார் கல்லூரிகளின் ஒழுங்காற்று விதி 22 உப விதி (2) இன் படியும், தனியார் உதவி பெறும் கல்லூரிகளின் ஆண்டு தணிக்கை உள் தணிக்கை குழுவினரால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகிறது.

ஆ) 15-07-1982 நாளிட்ட சமூக நலத் துறை அரசாணை எண் - 1788 இன்படி 1982 - 83 ஆம் ஆண்டு முதல் மாணவர்களுக்கான உதவித் தொகை அனைத்து கல்லூாரி முதல்வரால் அனுமதிக்கப்படுவதில் கல்லூரிக் கல்வி ஆணையருக்கு அளிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வின் படி மாணவர்கள் உதவித் தொகை மீதான தணிக்கையும் உள்தணிக்கை குழுவினரால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகிறது.

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 1

**பத்தி எண்: 1**

2017-2018 முதல் 2020-2021 தணிக்கை ஆண்டுகளில் பணியில் சேர்ந்துள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களின் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்துள்ள பதிவினை ரத்து செய்து, வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தினை தணிக்கைக்கு சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பத்தி எண்: 2**

2017-2018 முதல் 2020-2021 தணிக்கை ஆண்டுகளில் பணிபதிவேட்டினை ஆய்வு செய்ததில் பின்வரும் ஆசிரியர்களுக்கு சிறப்பு சேம நலநிதி -2000 திட்டத்தில் தொகை ரூ.70/-க்குரிய முதல் தவணை சந்தா தொகை பிடித்தம் மேற்கொள்ளப்பட்ட விவரம் பணிப்பதிவேட்டில் பதியப்படாமல் உள்ளன. இதனை பணிப்பதிவேட்டில் பதிந்து தணிக்கைக்கு சமர்பிக்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

1. முனைவர். இரா. செல்வமதி சுகிர்தா, உயிர் தாவரவியல் உதவிப்பேராசிரியர்.
2. முனைவர். வா. பிரியா, பெருளறிவியல் துறை உதவிப்பேராசிரியர்.
3. முனைவர். K.P. சண்முக வடிவு, கல்வியியல் உதவிப்பேராசிரியர்
4. முனைவர். K. கமலாதேவி, ஆங்கில துறை உதவிப்பேராசிரியர்.
5. திருமதி. V. அருள் செல்வி, கல்வியியல் உதவிப்பேராசிரியர்.
6. முனைவர். டை. கவிதா, தமிழ் துறை உதவிப்பேராசிரியர்.
7. முனைவர். S. வேல்விழி, உடற்கல்வி இயக்குநர்.
8. திருமதி. A. கவிதா, நூலகர்.

**பத்தி எண்: 3**

2017-2018 முதல் 2020-2021 தணிக்கை ஆண்டுகளில் பணிபதிவேட்டினை ஆய்வு செய்ததில் கல்வியியல் உதவிப்பேராசிரியர், முனைவர். K.P. சண்முக வடிவு என்பாரின் ஈட்டிய விடுப்பு கணக்கில் பின்வரும் விவரப்படி அதிகப்படியாக ஈட்டிய விடுப்பு நாட்கள் பணிபதிவேட்டில் பதியப்பட்டுள்ளன.

1. பணிப்பதிவேடு தொகுதி-I, பக்கம்-31இல், 29.12.2013 முதல் 07.10.2014 வரை -283 பணிநாட்களுக்கு 11 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. மீளவும் இந்த 283 பணிநாட்கள் முன்கொணர்வு செய்யப்பட்டு பக்கம் 32இல் கணக்கில் எடுத்துகொள்ளபட்டு, பக்கம்-33இல் 14.11.2015 வரை 365 பணிநாட்கள் கணக்கிடப்பட்டு, 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் 11 நாட்கள் ஈட்டிய விடுப்பு அதிகப்படியாக பதியப்பட்டுள்ளது.
2. பணிப்பதிவேடு தொகுதி-I, பக்கம் 33இல், 28.10.2016 முதல் 22.10.2017 வரை -354 பணிநாட்களுக்கு 14 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. மீளவும் இந்த 354 பணிநாட்கள் முன்கொணர்வு செய்யப்பட்டு(பக்.34ல்) கணக்கில் எடுத்துகொள்ளபட்டு 13.11.2017 வரை 365 பணிநாட்கள் கணக்கிடப்பட்டு, 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் 14 நாட்கள் ஈட்டிய விடுப்பு அதிகப்படியாக பதியப்பட்டுள்ளது.

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 18

3. பணிப்பதிவேடு தொகுதி-I, பக்கம் 35இல், 14.11.2018 முதல் 13.09.2019 வரை 304 பணிநாட்களுக்கு பதில் தவறாக 14.11.2019 - 13.09.2019 என பதிந்து 324 பணிநாட்களும் 04.10.2019 - 13.11.2019 என 41 பணிநாட்களுடன் சேர்த்து 365 பணிநாட்களுக்கு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் 14.11.2018 முதல் 13.11.2019 வரை தகுதியுள்ள பணிநாட்கள் 345 மட்டுமே. இதற்கு 14 நாட்கள் மட்டுமே ஈட்டிய விடுப்பு வழங்கப்பட வேண்டும். இதில் 1 நாள் ஈட்டிய விடுப்பு அதிகப்படியாக பதியப்பட்டுள்ளது.

மேற்காணுமாறு, அதிகபடியாக பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ள **26 நாட்கள் ஈட்டிய விடுப்பினை** அன்னாரின் ஈட்டிய விடுப்பு கணக்கிலிருந்து கழித்து ஈட்டிய விடுப்பு கணக்கினை சரிசெய்து தணிக்கைக்கு சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது

**<u>பத்தி எண்: 4</u>**

2017-2018 முதல் 2020-2021 தணிக்கை ஆண்டுகளில் அஞ்சல் கணக்கு விவரங்கள் சரிபார்க்கப்பட்டதில், 12.06.2020 அன்று பதிவஞ்சல் ரூ.172/-க்கு மட்டுமே ரசீது ஒட்டப்பட்டுள்ளது. ஆனால் ரூ.344/-க்கு பதிவஞ்சல் அனுப்பப்பட்டுள்ளதாக கணக்கு எழுதப்பட்டுள்ளது. இதன் விவரம் தணிக்கைக்கு சமர்பிக்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

**<u>பத்தி எண்: 5</u>**

2017-2018 முதல் 2020-2021 தணிக்கை ஆண்டுகளில் வருகைப் பதிவேடு பார்வையிடப்பட்டதில், 14.10.2019, 23.11.2019, 24.02.2020, 03.02.2021, 15.02.2021, 28.08.2021, 25.11.2021, 20.12.2021 ஆகிய நாட்களில் முதல்வர் முனைவர். சாந்தி அவர்கள் தற்செயல் விடுப்பில் சென்றுள்ள நிலையில், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களின் வருகை பதிவேடுகளில் மேற்குறிப்பிடப்பட்ட நாட்களுக்கு முதல்வர் முனைவர். சாந்தி அவர்களால் சுருக்கொப்பமிடப்பட்டுள்ளது. இதற்கான விளக்கம் தணிக்கைக்கு சமர்பிக்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 1

**பத்தி எண்: 6**

தணிக்கை ஆண்டான 2017-2018, 2018-2019, 2019-2020 மற்றும் 2020-2021 வரையிலான காலத்திற்குட்பட்ட, நூலகத் துறையினை சார்ந்த இருப்பு பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதில் பின்வரும் விவரங்கள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

As per Librarian Accession Register (Page 95) up to 2020-2021

Total No. of Books: 28379 ஆகும்.

03.07.2019 நாளிட்ட ஆண்டு இறுதி சரிபார்ப்பு அறிக்கையின்படி, 27152 புத்தகங்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) Physical Verification | : | 20269 |
| 2) Under Circulation | : | 102 |
| 3) Transfer to other Department | : | 4063 |
| 4) Already last | : | 06 |
| 5) Already deleted | : | 2632 |
| 6) Books Missing | : | 80 |
| Total | | 27152 |

கல்லூரி நூலகரிடமிருந்து தொலைந்து போன (Missing) 80 புத்தகங்களின் சார்பாக, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அறிக்கையினை பெற்று இணை இயக்குநருக்கு பணிந்து சமர்ப்பிக்குமாறு கல்லூரிச் செயலருக்கு தெரிவிக்கலாகிறது.

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 18

## தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

ஆணையிடுபவர்: முனைவர் நா. இராமலட்சுமி, எம்.எஸ்ஸி., எம்.பில்., பிஎச்.டி.,

ந.க.எண்: 4746/ஆ1/2022, நாள்:28-09-2022

பொருள்: தணிக்கை – தருமபுரி மண்டலத்திற்கு உட்பட்ட அரசு நிலை -II / அரசு உதவிபெறும் கல்லூரிகள் - தணிக்கை மேற்கொள்ளுதல் - உத்தரவிடுதல் - தொடர்பாக.

---

**ஆணை:**

தருமபுரி மண்டலத்தை சார்ந்த அரசு நிலை -II / அரசு உதவிபெறும் கல்லூரிகளில் தணிக்கை மேற்கொள்ள வேண்டிய கல்லூரிகளில் அட்டவணையின்படி, அக்கல்லூரி பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலக தணிக்கை குழுவினரால் தணிக்கைப் பணி மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | கல்லூரியின் பெயர் | தணிக்கை மேற்கொள்ளப்படும் ஆண்டு | தணிக்கை மேற்கொள்ளும் நாட்கள் |
|---|---|---|---|
| 1. | அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரிமங்கலம். | 2019-2020 முதல் 2021-2022 வரை (3 வருடம்) | 10.10.2022 முதல் 14.10.2022 வரை |
| 2. | பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலக்கோடு. | 2020-2021 முதல் 2021-2022 வரை (2 வருடம்) | 17.10.2022 முதல் 19.10.2022 வரை |
| 3. | அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பருகூர். | 2020-2021 முதல் 2021-2022 வரை (2 வருடம்) | 26.10.2022 முதல் 28.10.2022 வரை |
| 4. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஓசூர். | 2020-2021 முதல் 2021-2022 வரை (2 வருடம்) | 31.10.2022 முதல் 02.11.2022 வரை |
| 5. | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல். | 2020-2021 முதல் 2021-2022 வரை (2 வருடம்) | 07.11.2022 முதல் 09.11.2022 வரை |
| 6. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம். | 2020-2021 முதல் 2021-2022 வரை (2 வருடம்) | 14.11.2022 முதல் 16.11.2022 வரை |
| 7. | அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையம். | 2020-2021 முதல் 2021-2022 வரை (2 வருடம்) | 17.11.2022 முதல் 19.11.2022 வரை |
| 8. | ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி(த), சேலம். | 2021-2022 (1 வருடம்) | 21.11.2022 முதல் 22.11.2022 வரை |
| 9. | ஸ்ரீ சாரதா உடற்கல்வியியல் கல்லூரி, சேலம். | 2021-2022 (1 வருடம்) | 23.11.2022 முதல் 24.11.2022 வரை |
| 10. | ஸ்ரீ சாரதா மகளிர் கல்வியியல் கல்லூரி(த), சேலம். | 2021-2022 (1 வருடம்) | 25.11.2022 முதல் 26.11.2022 வரை |
| 11. | சேலம் சௌடேஸ்வரி கல்லூரி, சேலம். | 2021-2022 (1வருடம்) | 01.12.2022 முதல் 02.12.2022 வரை |
| 12. | கந்தசாமிக் கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர், நாமக்கல். | 2021-2022 (1 வருடம்) | 05.12.2022 முதல் 06.12.2022 வரை |
| 13. | ஜே.கே.கே. நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம். | 2021-2022 (1 வருடம்) | 07.12.2022 முதல் 08.12.2022 வரை |

(த.பி.பா)

SRI SARADA COLLEGE OF EDUCATION
173 A
06 OCT 2022
SALEM-636016.

8-8
6/10/22

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 18:47